1993 மார்ச் 17]

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டுதோறும் இவ்வளவு அதிகமான தொகை பத்திரப் பதிவு மூலமாக அரசுக்கு வரவேண்டும் என்று குறியீடு செய்வது இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 104, திரு. சோ. இராசாராமன், இருக்கையில் இல்லை. அவருக்கு பதிலாக திரு. சத்தியமூர்த்தி கேட்கிறார். மாண்புமிகு கல்வி அமைச்சர்.

104—

தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழகப் பதிப்புத் துறையில் விற்பனையாகாமலுள்ள நூல்கள்

*9034—திரு. சோ. இராசாராமன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழகப் பதிப்புத் துறையில் ஒரு கோடி ரூபாய் மதிப்புள்ள நூல்கள் விற்பனையாகாமல் தேங்கியுள்ளது அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அவற்றை விற்பனை செய்ய அரசு உரிய நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) இது குறித்து அரசு தேவையான நடவடிக்கை எடுத்து வருகிறது.

திரு. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் பதிப்புத் துறையில் ஒரு கோடி ரூபாய் மதிப்புள்ள நூல்கள் வினியோகிக்கப்படாமல் தேக்க நிலையில் இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள். எவ்வளவு காலம் அந்தப் புத்தகங்கள் தேக்க நிலையில் இருக்கின்றன? அதை வினியோகிப்பதற்கு என்ன நடவடிக்கை ஏற்கெனவே எடுக்கப்பட்டது? இனிமேல் எந்த நடவடிக்கையை அரசு எடுக்க இருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த வெளியீடுகள் பெரும்பாலும் திறமை மிக்க ஆசிரியர்களால் எழுதப்பட்டிருந்தபோதிலும் அவைகள் எல்லாம் வல்லுநர்களால் எழுதப்பட்ட நூல்கள் ஆகும். ஆகவே, அந்த நூல்களை எல்லாம் பல்கலைக் கழகத்திலேதான் போய் வாங்க வேண்டும் என்ற நிலையிலே இருக்கிறது. அதன் காரணமாக விற்காமல் ஏறத்தாழ 95 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள நூல்கள் அப்படியே இருக்கின்றன. இத்தனை ஆண்டுகளாக அவைகளை பதிப்பித்து வந்திருக்கிறார்கள். மேலும், பதிப்பிக்கப்பட வேண்டிய நூல்களும் இருக்கின்றன. அதிலே ஒரு தேக்க நிலை ஏற்பட்டிருக்கிற காரணத்தால் அதன் விற்பனையை விரிவுபடுத்துவதற்கு சில நடவடிக்கைகளை எடுத்திருக்கிறார்கள். தமிழ்ப் பல்கலைக் கழக வெளியீடுகள் ஒவ்வொன்றிலும் ஒரு படியாவது அனைத்து அரசுப் பள்ளி, கல்லூரிகளிலும், அரசு நிதி உதவி பெறும் தனியார் பள்ளி, கல்லூரிகளிலும் வாங்குவதற்கு ஒரு ஆணை பிறப்பிக்க அவர்கள் கேட்டிருக்கிறார்கள். தமிழ் நாட்டிலுள்ள அனைத்து பொது நூலகங்களிலேயும் ஒரு படியாவது வாங்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். தமிழ்நாட்டிலுள்ள மாவட்டத் தலை நகரங்களிலுள்ள புகழ்பெற்ற புத்தக விற்பனை நிலையங்களின் வழியாக விற்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. வெளிநாடுகளிலுள்ள பல்கலைக் கழகங்களுக்கு தமிழ்ப் பல்கலைக் கழகங்களிலுள்ள வெளியீடுகளை விற்பனை செய்வதற்கும் ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. பல்கலைக் கழக வெளியீடுகளை விற்பனை செய்வதற்கு ஒரு விரிவுரையாளரையே பொறுப்பாளராக நியமனம் செய்திருக்கிறார்கள். மிகக் குறைந்த அளவில் விற்பனை செய்யப்பட்டுள்ள நூல்களை 50 விழுக்காடு தள்ளுபடி தரவும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. பல்கலைக் கழக வெளியீடுகளை விற்பனை செய்யும் பொருட்டு கீழ்க்கண்ட முறைப்படி தள்ளுபடி தர இருக்கிறார்கள். களஞ்சியங்கள், பெரும் சொல் அகராதி, பாரதி பாடல்கள் ஆகியவற்றிற்கு பொது விற்பனை 25 சதவீதம், கல்வி நிறுவனங்கள் 25 சதவீதம், புத்தக விற்பனையாளர்களுக்கு 25 சதவீதம், திருக்குறள் தமிழ் ஆங்கிலம் பொது விற்பனை 15 சதவீதம், கல்வி நிறுவனங்கள் 15 சதவீதம், புத்தக விற்பனையாளர் 25 சதவீதம், ஏனைய நூல்கள் பொது விற்பனை 25 சதவீதம், கல்வி நிறுவனங்கள் 25 சதவீதம், புத்தக விற்பனையாளர்களுக்கு 40 சதவீதம்.

முற்பகல் 10-15

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கு. தங்கமுத்து.

திரு. கு. தங்கமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் சிறந்த ஆய்வு நூல்களும் கருத்து நூல்களும் இருக்கின்றன. என்னென்ன

நூல்கள் அங்கே இருக்கின்றன என்பது பலநிறுவனங்களுக்கும் பல பேருக்கும் தெரியாத சூழ்நிலை இருக்கிறது. இப்படிப்பட்ட நூல்கள், இந்த இந்த தரத்தில் உள்ள நூல்கள் அங்கே இருக்கின்றன என்ற முறையான அறிவிப்பினை, விளம்பரத்தினை உரிய நிறுவனங்களுக்கும் பொது மக்களுக்கும் தரப்படுமா ? அப்படி தரப்பட்டு தரம் உள்ள நூல்கள் எல்லாம் விநியோகிப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் :</u> பேரவைத் தலைவர் அவர்களே இந்தப் பிரச்சினை தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்கு மட்டும் அல்ல. எல்லாப் பல்கலைக் கழகங்களிலும் இந்தப் பிரச்சினை இருக்கிறது. ஆய்வு நூல்களை பதிப்பித்து விற்பனை ஆகாமல் வைத்திருக்கிறார்கள். பல ஆராய்ச்சி நூல்களைப் பதிப்பித்து விற்பனையாகாமல் வைத்திருக்கிறார்கள். ஆகவே, இவற்றையெல்லாம் ஒரே இடத்திலே கிடைக்கும்படியாகச் செய்யவும், இந்த இடத்திலே கிடைக்கும் என்பதைப் பற்றி விளம்பரம் செய்யவும் அரசு யோசனை செய்து வருகிறது.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> டாக்டர் ச. ஆரோக்கியசாமி.

<u>டாக்டர் ச. ஆரோக்கியசாமி :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய கல்வி அமைச்சர் அவர்கள் பேசும்போது தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் மிகப் பழமையான நூல்களை மட்டும் தான் அடித்து வைத்திருப்பதாகச் சொன்னார்கள். தற்காலத்தில் நவீன இலக்கியங்கள், புகழ் பெற்று விளங்கிக் கொண்டிருக்கின்றன. அந்த இலக்கியப் புத்தகங்களை எல்லாம் தமிழ்ப் பல்கலைக் கழகம் பதிப்பித்து வெளியிட முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நவீன இலக்கியங்களைத் தனியார் நிறுவனங்களே அச்சிட்டு பதிப்பித்து அவர்கள் வெளியிட்டுக் கொண்டிருக்கிறார்கள். இங்கே அந்தத் தமிழ்ப் பல்கலைக் கழகத்திலே நடைபெறுகிற ஆராய்ச்சிகளின் அடிப்படையில், அங்கேயிருக்கின்றவர்களும், மற்றவர்களும் எழுதுகின்ற அந்த நூல்களைத்தான் அவர்கள் பதிப்பித்துக் கொண்டிருக்கிறார்கள்.